மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
Provincial Department of Education, Northern Province

# தரம் -03 மாணவர்களுக்கானநிலையறிபரீட்சை -2021

பாடம் :- கணிதம் நேரம் -1.30 மணித்தியாலம்

மாணவர் பெயர்:- ..............................பாடசாலை:- ...............................................

பகுதி -1


➢ பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரியவிடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக?

01) 100 இற்குமுன்னுள்ளஎண்யாது?

(1) 90 (2) 99 (3) 89

02) நேற்றுபுதன்கிழமையாயின் நாளைமறுநாள் என்னகிழமை?

(1) சனிக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) திங்கட்கிழமை

03) 


இத் திண்மஉருவின் பெயர் யாது?


(1) கனவுரு
(2) கோளம்
(3) சதுரமுகி


04) பொதுவித்தியாசம் 5 ஆக உள்ளஎண்கோலத்தைத் தெரிவுசெய்க?

(1) 20 , 25 , 30 , 35 (2) 10 , 20 , 30 , 40 (3) 20 , 25, 40, 45

05) முழு உருவில் அரைப்பங்குநிழற்றப்பட்டஉரு எது?

(1) 

(2) 

(3) 

06) வருடத்தில் மூன்றாவதுமாதம் எது?

(1) ஏப்பிரல் (2) யூன் (3) மார்ச்

07) இக் கடிகாரமுகம் காட்டும் நேரம் யாது?



(1) 12 மணி
(2) 2 மணி
(3) 1 மணி
(4)



kalvi.lk

08) 
இப் படத்தின் படிபிள்ளையின் இடதுகைப்பக்கம் இருப்பது யாது?

(1) நாய்

(2) மரம்

(3) கிளி

09) 10 லீற்றரை நியமக் குறியீட்டில் எழுதினால் கிடைப்பது?

(1) 10$L$ (2) $l$10 (3) 10$l$

10) செவ்வகமொன்றிலுள்ளசமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 4 (3) பல

11) நீளத்தைஅளக்கும் சர்வதேசஅலகு யாது?

(1) Kg (2) $m$ (3) $l$

12) " 98"என்பதைச் சொற்களில் சரியாக எழுதும் போது விடையாக அமைவது?

(1) தொன்னூற்றிஎட்டு (2) தொன்னூற்றெட்டு (3) தொண்ணூற்றெட்டு

13) நான்முக ிஒன்றிலுள்ள முக்கோணவடிவான முகங்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 2 (2) 4 (3) 3

14) 149 இல் இலக்கம் 4 காட்டும் பெறுமானம் யாது?

(1) 40 (2) பத்துக்கள் (3) ஒன்றுகள்

Education கல்வி அதியாபன

15) 5, 7 , 9 , 11 ,……….. என்றஎண் கோலத்தில் வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண் யாது?

(1) 12 (2) 13 (3) 15

16) ஒன்றுக்கள் 6 உம் பத்துக்கள் 3 சேர்ந்தஎண் யாது?

(1) 63 (2) 36 (3) 33

17) இனிப்பு ஒன்றின் விலை ரூபாய் 6.00 அவ்வாறான இரண்டு இனிப்புக்களை வாங்கத் தேவையான பணம் யாது?

(1) ரூபாய் 8.00 (2) ரூபாய் 10.00 (3) ரூபாய் 12.00

18) 84, 68, 92 ஆகிய எண்களில் மிகச் சிறியஎண் யாது?

(1) 84 (2) 68 (3) 92

19) 11 மிட்டாய்களை இருவருக்குச் சமமாகப் பகிர்ந்தால் மிகுதியாக உள்ள மிட்டாய்களின் எண்ணிக்கை யாது?

(1) 1 (2) 2 (3) 3

20) 14 + 3 = ………. வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?


(1) 18 (2) 16 (3) 17

(20x 2 = 40புள்ளிகள்)

## பகுதி -11


- பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரியவிடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

01) பின்வரும் வடிவங்களின் பெயரை எழுதுக?

1)  ………………

2)  ……………….………………

02) பின்வரும் திண்ம உருக்களின் பெயரை எழுதுக?

1)  ………………

2)  …..……………

03) 1) செம்மஞ்சள் நிறத்தினால் அச்சிடப்பட்டுள்ள தாள்காசு எது? ……………………………..

2) இளஞ்சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்டுள்ள தாள்காசு எது? ………………………………

04) 1) 205 என்ற எண்ணைச் சொற்களில் எழுதுக? ……………..……………………………

2) முந்நூற்று நாற்பத்தொன்பது என்ற எண்ணை இலக்கங்களில் எழுதுக? …………………

05) 1) 58 எனும் எண்ணிலுள்ள பத்துக்கள் எத்தனை?...........................................................


2) 75 எனும் எண்ணிலுள்ள ஒன்றுக்கள் எத்தனை? ………………………………

06) 1)இக் கடிகாரமுகம் காட்டும் நேரம் யாது?



………………………………

2) 10.00 மணியை இக் கடிகாரமுகத்தில் குறித்துக் காட்டுக? (மணித்தியால முள், நிமிட முள் என்பன சரியான முறையில் குறித்தல் வேண்டும்)



07) 1) பின்வரும் எண்களைச் சிறிய எண்ணில் இருந்து பெரிய எண்வரை எழுதுக?

**255 , 387 , 102 , 346** - ……………………………………….

2) பின்வரும் எண்களைப் பெரிய எண்ணில் இருந்து சிறிய எண்வரை எழுதுக?

**122,487 ,208,459** - ……………………………………….


08) 1) ஆவணி மாதத்திலுள்ள நாட்கள் எத்தனை?……………………………………………


2) ஒரு வருடத்திலுள்ள மாதங்கள் எத்தனை? ……………………………………………..




kalvi.lk

09) பின்வரும் உருக்களில் அடுத்து வரவேண்டிய உருவைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் வரைக?

1)  ..............................................

2)  ............................

10) வரிப்பட உதவியுடன் வினாக்களுக்கு விடைதருக?




1) வீட்டிலிருந்து Aஎன்ற இடத்திற்குச்

2) B என்ற இடத்திலிருந்து வீடு நோக்கி வரும் போது

........................................

(10x 3 = 30புள்ளிகள்)

➢ சுருக்குக?

```
  22        25        79
+ 47      + 16      - 26
-----     -----     -----

-----     -----     -----
```

```
  27
x  4        2 | 29
-----
```

➢ பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

11) A வகுப்பிலுள்ள ஆண்பிள்ளைகள் 12ஆகும். B வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகள் 17 ஆகும்.இரண்டு வகுப்புக்களிலுமுள்ள ஆண்பிள்ளைகள் எத்தனை?

......................................................................

12) 42 தேங்காய்கள் இரண்டு குவியல்களாக்கப்பட்டன. எனின் ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

......................................................................

13) வியாபாரிஒருவரிடம் 27 ரம்புட்டான் பழங்கள் இருந்தன. அவர் அதில் 9 ஐ விற்றார். அதன்படி,அவரிடம் மீதியாகவுள்ள ரம்புட்டான் பழங்களின் எண்ணிக்கையாது?

......................................................................

14) பெட்டிஒன்றிலுள்ள பென்சில்களின் எண்ணிக்கை 6 ஆகும். அதன்படி, அத்தகைய 3 பெட்டிகளில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………

15) அண்ணாபாடசாலையில் இருந்த வீட்டுக்கு வந்தநேரம் பகல் 2.00 மணிக்காகும். தங்கை வீட்டிற்கு வந்த நேரம் அண்ணா வருவதற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்பாகும்.அதன்படி தங்கை வீட்டிற்கு வந்தநேரம் யாது?

……………………………………………………………………

(5x 3 = 15புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page